[14th November 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM:

(*a*) Yes, Sir.

(*b*) & (*c*) One Police constable was killed between mile 100/9–10 near Villupuram Station.

* 842 SRI A. GOVINDASAMY and SRI C. MUTHIAH: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் நமது ஜனாதிபதி அவர்கள் தமிழ் நாட்டில் ரயில் சுற்றுப் பிரயாணம் செய்த சமயம் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்த சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எத்தனை பேர்கள் ஆபத்துக்குள்ளாகி உயிர் இழந்தார்கள் ?

(ஆ) இவர்களில் மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எத்தனை பேர்கள் சென்னை, ராஜ்ய உத்தியோகஸ்தர்கள் எத்தனை பேர்கள் ?

(இ) சென்னை ராஜ்ய உத்தியோகஸ்தர் குடும்பத்திற்கு ஏதாவது நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதா ?

(ஈ) அப்படியானால் தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) One Police constable of the State Government was killed between mile 100/9–10 near Villupuram station.

(*c*) & (*d*) The question of granting gratuity to the members of the bereaved family is under consideration.

SRI A. GOVINDASAMY: எத்தனை பேர் அதில் படுகாயம் அடைந்திருக்கிறார்கள் ? அவர்கள் எல்லோருக்கும் நிவாரணம் அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்த விபத்தைப் பற்றி நான் கொஞ்சம் விபரம் சொல்ல வேண்டும். இந்தக் குறிப்பிட்ட கான்ஸ்டேபிள் ரயில்வே லைன் காவலுக்காக நியமிக்கப்பட்டிருந்தவர். இவர் லைனில் படுத்துக்கொண்டு தூங்கி விட்டார். 11-20-க்கு ஒரு ரயில் வந்தது. ரயில் வருவதை உணர்ந்தவுடன் தலையைத் தூக்கினார். தலையில் அடிபட்டு விழுந்து விட்டார்.

SRI C. MUTHIAH: ஆர்ம்டு ரிசர்வ் போலீசைக் காபந்துக்காகப் போட்டார்களா ? கிராமவெட்டி தலையாரிகளை காபந்துக்காகப் போட்டார்களா ? வெட்டி தலையாரிகளில் யாராவது உயிரை இழந்தார்களா ? அப்படி உயிர் இழந்திருந்தால் அவர்கள் குடும்பங்களுக்கு உதவி அளிக்கப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதைப் பற்றி தனியாகக் கேள்வி போடவேண்டும். ஆர்ம்டு போலீஸ் காவலில் இருந்தாலும், தலையாரி இருந்தாலும் ஆபத்து ஒரே மாதிரிதான்.

Manufacture of agricultural implements

* 843 *Q*.—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any industry for the manufacture of agricultural implements has been started in Tiruchirappalli district;

(*b*) the date when the same will go into production; and

(*c*) the details about this Small Scale Industry?